**மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி மற்றும் சக்திவலு மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு**

**மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை**

# ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல்

''திட்வா'' அனர்த்த நிலைமையினால் மத்திய மாகாண சபையின் நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை வழமைக்குக் கொண்டுவருவதற்கு மேலதிக பணியாளர்களைப் பெற்றுக்கொள்ளல்

''திட்வா'' அனர்த்த நிலைமையினால் பாதிப்புக்குள்ளான மத்திய மாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய வீதிகளை மீண்டும் வழமைக்குக் கொண்டுவரும் பொருட்டு பின்வரும் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொறியியலாளர் (கட்டமைக்கப்பட்ட திட்டம்) – 01 பதவி**

- **மாதாந்த கொடுப்பனவு**

  MM 1-1 சம்பள வகுதியின் ஆரம்பநிலை சம்பளத்திற்கு இயைபான வகையில் மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

- **தகைமைகள்:**

  பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சிவில் பொறியியல் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

  அத்துடன்

  இலங்கை பொறியியல் நிறுவனம் மற்றும் பொறியியல் சபையில் சார்புடைய சிவில் பொறியியலாளராக பதிவு செய்திருத்தல்.

  மற்றும்

  ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ நிலை'' பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல் மற்றும் அதில் கட்டமைக்கப்பட்ட திட்டம் (வீதி நிர்மாணம்) துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

- **வயது:**

  35 வயதற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

**பொது நிபந்தனைகள்:**

1. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. பதவிக்குரிய கடமைகளை செவ்வனே நிறைவேற்றும் பொருட்டு மத்திய மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கான உடல், உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
4. சகல விண்ணப்பதாரர்களும் பதவிக்கு ஆட்சேர்த்தல் தொடர்பான அனைத்து தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் நாள் அல்லது அதற்கு முன் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.
5. அரச அல்லது நியாயாதிக்க சபையில் சேவையாற்றுபவர்களானால் நிறுவனத்தின் தலைமையின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.
6. விண்ணப்பதாரர்கள் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்து அனுப்ப வேண்டும் என்பதுடன் தாம் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயரைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.
7. உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது தகவல் பொய்யானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பதற்கு முன் தெரியவந்தால் தகுதியற்றவனாகக் கவனத்திற் கொள்ளப்பட்டு உங்களது அபேட்சகத்துவம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது பிழையான தகவலொன்று ஆட்சேர்க்கப்பட்டதன் பின் தெரியவந்தால் அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சேவையிலிருந்து விலக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
8. குறித்த துறையில் உள்ள சேவை அனுபவத்திற்கு நேர்முகத் தேர்வின்போது முன்னுரிமை வழங்கப்படும்.

**சேர்த்துக் கொள்ளப்படும் முறை**

- கட்டமைக்கப்பட்ட தேர்வின் மூலம் ஆட்சேர்க்கப்படும்.

இந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் எனும் அபிப்பிராயத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட தினம் அல்லது அதற்கு முன் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர். விண்ணப்பதாரர்கள் இந்த பதவிக்கு நியமிப்பதற்கான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளார்கள் என ஏற்றுக்கொண்டதாக கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் சுய விபரங்களை உள்ளடக்கி தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவத்தை குறித்த சான்றிதழ்களின் பிரதிகளுடன் (சான்றுப்படுத்தப்பட்ட) விண்ணப்பங்களைத் தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு 2026-06-12ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்பம் கோரப்படும் இறுதி நாளுக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மற்றும் கடித உறையில் பதவியைக் குறிப்பிடாமல் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பொது முகாமையாளர்,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**மத்திய மாகாணம்.**

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல. 09, எஹெல்லேபொல குமாரிஹாமி மாவத்தை,**
**போகம்பர, கண்டி.**
**தொலைபேசி: 081-2204378**